**22.02.2023 அ.வ.எண். 119/2021 வா.சா.1 – செல்லப்பாண்டி**

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

**நான் இந்த வழக்கின் 3ம் வாதி. 1ம் வாதி எனது அப்பா. 2ம் வாதி எனது அம்மா. 1ம் பிரதிவாதி என் சகோதரியின் கணவர். 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியின் மகன். 3ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியின் மருமகன், 2ம் பிரதிவாதியின் கணவர். தாவா சொத்துக்கள் ஆதியில் எனக்கும், வாதிகளுக்கும் பாத்தியப்பட்ட சொத்து ஆகும். தாவா சொத்துக்கள் தவிர 20 அயிட்ட சொத்துக்கள் தாவா சொத்துக்களுக்கு அருகில் உள்ளது. அந்த 20 அயிட்ட சொத்துக்களுக்கும் பட்டா எனது பெயரில் உள்ளது. 25.09.1998ம் தேதி தாவா சொத்துக்கள் அனைத்தையும் 1ம் பிரதிவாதிக்கு வாதிகளாகிய நாங்கள் கிரையம் செய்து கொடுத்தோம். 2 பத்திரமாக பதிவு செய்து கொடுத்தோம். 1ம் பிரதிவாதி பெயரில் எப்போது பட்டா மாறியது என்று எனக்கு தெரியாது. 15 வருடத்திற்கு மேலாக 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா ஏற்பட்ட விபரம் எனக்கு தெரியும். கிரையம் வாங்கிய காலம் முதல் 1ம் பிரதிவாதி வரி செலுத்தி வருகிறார் என்று சொன்னால் எனக்கு தெரியாது. கிரையம் கொடுத்த பிறகு தாவா சொத்திற்கு வரி செலுத்தவில்லை என்று சொன்னால் 2006ல் செலுத்தியுள்ளேன். 2006க்கு பின்பு நான் தாவா சொத்துக்களுக்கு வரி செலுத்தவில்லை. கிரையம் பெற்ற காலம் முதல் 1ம் பிரதிவாதி தாவா சொத்துக்களுக்கு வரி செலுத்தி வருகிறார் என்றும், நான் 2006 வரை வரி செலுத்தியதாக சொல்வது பொய் என்றும், அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதியுடன் எங்களுக்கு 2,3 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தை பொறுத்து கிரைய பத்திரம் போட்டுக்கொடுத்த பிறகு பேச்சுவார்த்தை இல்லை. 2, 3 பிரதிவாதிகளுக்கு கிரைய பத்திரம் போடுவதற்கு எத்தனை நாட்களுக்கு முன்பு 1ம் பிரதிவாதி அவரது மகனுக்கு திருமணம் செய்தார் என்று எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதியின் மகனின் திருமணத்திற்கு நாங்கள் போகவில்லை. சொத்து பிரச்சனை ஏற்பட்டதால் நான் போகவில்லை. 1ம் பிரதிவாதி எனது வீட்டில் பெண் எடுப்பார் என்று எதிர்பார்த்தும் எடுக்காததால் நான் கல்யாணத்துக்கு போகவில்லை**

அதன்பிறகு இந்த வழக்கையும் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வரி ரசீதுகள் அனைத்தும் நாங்கள் 1ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுப்பதற்கு முன்பு ஏற்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. சக்தி சுகருக்கு கரும்பு வெட்டி அனுப்பியதாக சொல்லும் ஆவணங்களில் சர்வே எண் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி ஆவணங்கள் தாவா சொத்துக்கும் சம்மந்தமில்லை என்றும், தாவா சொத்துக்கு அருகில் உள்ள சொத்துக்களுக்கு சம்மந்தப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. பாண்டியன் கிராம வங்கியில் லோன் வாங்கியதற்கும் தாவா சொத்துக்கும் சம்மந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தாவா சொத்துக்களை 2,3 பிரதிவாதிகளுக்கு 04.03.2021ல் கிரையம் கொடுத்துவிட்டார். பட்டா மற்றும் ரசீதுகள் தற்போது 2, 3 பிரதிவாதிகள் பெயரில் உள்ளது. எனக்கும், 1ம் பிரதிவாதிக்கும் உறவு சுமுகமாக இருந்ததால் 1998 முதல் வழக்கு போடும் வரை நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. 1ம் பிரதிவாதிக்கு உண்மையாக கிரையம் கொடுத்ததால் தான் 20 வருடங்களாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், தற்போது ஏற்பட்ட குடும்ப பிரச்சனை காரணமாக கடனுக்காக கிரைய பத்திரம் ஏற்பட்டதாக பொய்யாக வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. கிரையம் பெற்ற காலம் முதல் 1ம் பிரதிவாதி அனுபவம் செய்து வருகிறார் என்றும், அதில் நானோ, எனது தாய், தந்தையோ அனுபவம் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. 20 வருடங்களுக்கு முன்பு கிரையம் கொடுத்துவிட்டு 1ம் பிரதிவாதி பெயரில் பாத்தியமாக இருந்து வருவதால் தற்போது தாவா சொத்துக்கள் மீது விளம்புகை பரிகாரமும், உறுத்துக்கட்டளை பரிகாரமும் கேட்க உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்து 20 வருடங்களுக்கு மேலாகிவிட்டதால் அதை ரத்து செய்ய உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி பத்திரத்தை ரத்து செய்ய உரிமை இல்லை என்பதாலும், 1ம் பிரதிவாதி, 2, 3 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்ததை ரத்து செய்ய உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கள் இன்றையதேதி வரை பிரதிவாதிகளின் அனுபவத்தில் இருந்துவருவதால்

1998க்கு பிறகு தாவா சொத்துக்களை வாதிகள் அனுபவம் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.